முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு)
ஸ்ரீவில்லிபுத்தூர்.
**C.O.S.No.05/2023**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் வாதியின் சாட்சிய வாக்குமூலம்.1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திருமதி.தமிழ்செல்வி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சதீஷ் | ஜாதி | : |
| த,பெ - க,பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

13.02.2026.

P.W.3

**முதல் விசாரணை தொடர்ச்சி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சியாக விசாரிக்கப்படுகிறார். 26.11.2025 ம் தேதியிட்ட இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 65(பி) ன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.39** ஆகும்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். நான் வாதி நிறுவனத்தில் 8 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். 2018 லிருந்து வேலை செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி நிறுவனம் பால் பாக்கெட் தயார் செய்யும் நிறுவனம் என்றால்சரிதான். எனது கம்பெனியில் இருந்து வாங்கப்பட்ட பிலிம்கள் அனைத்தும் பால் பாக்கெட் தயாரிப்பதற்காகவே வாங்கப்பட்டவை என்றால் சரிதான். பால் பாக்கெட் தயாரிப்பதற்காக வாங்கப்பட்ட பிலிம்களின் தரம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எந்த ஆண்டு முதல் எங்களிடம் பிலிம்கள் வாங்கினார் என்றால் 2017 முதல் வாங்கினார்கள். 08.07.2019 ம் தேதிய இன்வாய்ஸ் தவிர மற்ற அனைத்து

இன்வாய்சுகளுக்கும் 1ம் பிரதிவாதியால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கம்பெனியால் எங்களது கம்பெனியில் இருந்து 08.07.2019ம் தேதிக்கு முன்பு 10.12.2018ல் இன்வாயிசின் மூலம் பிலிம்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 10.12.2018ன் படி கொடுக்கப்பட்ட இன்வாய்ஸ்படி உள்ள தரம்தான் 08.07.2019ம் தேதியிட்ட இன்வாய்ஸ் கொடுக்கப்பட்டது என்றால் உற்பத்தி பிரிவில் உள்ள நடைமுறை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பிரகதி மில்க் பிராடக்ட் என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட சரக்குகளின் அதே தரம் தான் 1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கும் அனுப்பப்பட்டுள்ளது என நான் கூறியுள்ளேன். பிரகதி மில்க் பிராடக்ட்க்கு அனுப்பப்பட்ட அதே தரம்தான் 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கும் அனுப்பப்பட்டது என்பது உற்பத்தி பிரிவில் உள்ளவருக்கு மட்டும் தெரியும், எனக்கு தெரியாது. ஒவ்வொரு கம்பெனியின் இயந்திரத்தின் அடிப்படையில் அவர்களின் தரம் மாறும் என்றால் சரிதான். ஒரு கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட இன்வாய்சை வைத்து மற்றக் கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட தரத்தை நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரிதான். ஒரு கம்பெனி கொடுக்கக்கூடிய இன்வாயிசின் அடிப்படையில் தரத்தின் தன்மை மாறுபடும் என்றால் சரிதான். பிரகதி மில்க் கம்பெனியும், 1ம் பிரதிவாதி கம்பெனியும் ஒரே மாதிரியான தரத்தில் உள்ள பிலிம்களை ஆர்டர் செய்தார்கள் என்றால் சரிதான். 08.07.2019ல் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பிலிம்களின் தரமும், பிரகதி மில்க் பிராடக்ட்க்கு கொடுக்கப்பட்ட பிலிம்களின் தரமும் ஒன்றாக இருந்தது என்றால் சரிதான். 08.07.2019ல் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பிலிம்களின் தரமும், அதற்கு முன்பாக கொடுக்கப்பட்ட பிலிம்களின் தரமும் ஒன்றாக

இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.12.2018 ம் தேதியிட்ட இன்வாய்சின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி கம்பெனியால் 431 கிலோ தரம் சரியில்லை என்று நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். 431 கிலோவுக்கு உண்டான தொகையை டெபிட் செய்து விட்டு மீதி பொருட்களுக்கான தொகையை 1ம் பிரதிவாதி செலுத்திவிட்டார்கள் என்றால் சரிதான். தரம் குறைவாக இருந்த பொருட்களுக்கு அதனுடைய விலையை டெபிட் செய்வதற்கு எங்கள் கம்பெனியில் ஒப்பந்தம் இருந்தது என்றால் எங்கள் நிருவாகத்தின் அறிவுறுத்தலின்படி நாங்கள் செய்வோம். 10.12.2018 ல் கொடுக்கப்பட்டுள்ள பெர்பாமன்ஸ் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 10.12.2018 க்கான பில்லுக்கு எங்களது நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பெர்பாமன்ஸ் சான்றிதழ் எங்களிடம் இல்லை. அனைத்து பில்களுக்கும் பெர்பாமன்ஸ் சான்றிதழ் வாங்குவது இல்லை. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு காட்டுவதற்காக மேற்படி பெர்பாமன்ஸ் சான்றிதழ் பெறுவதுண்டு. பெர்பாமன்ஸ் சான்றிதழ் எங்களது கம்பெனி கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தந்த கம்பெனிகளால் எங்களுக்கு கொடுக்கப்படும் சான்றிதழ் ஆகும். நான் தாக்கல் செய்த பெர்பாமன்ஸ் சான்றிதழ் எங்கிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்று வா.சா.ஆ.38 ல் குறிப்பு இல்லை. பெர்பாமன்ஸ் சான்றிதழ் என்னுடைய கணினிக்கு இ–மெயில் மூலம் வரும். நான் தாக்கல் செய்துள்ள பெர்பாமன்ஸ் சான்றிதழில் அந்தந்த நிறுவனத்திற்கு என்னென்ன ஸ்பெசிபிகேசனில் பொருட்கள் சப்ளை செய்யப்பட்டது என்று அதில் இல்லை. அது குறித்த விபரங்கள் சான்றிதழில் குறிப்பிடப்படாது. அந்த மாதிரி வா.சா.ஆ.38 ஆவணம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.38 ஆவணத்தை பற்றி, வழக்குரையில் எதுவும் சொல்லாமல்

வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வியாபார வழக்கப்படி வட்டி செலுத்த வேண்டும் என்று எங்களது கம்பெனிக்கும், 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் ஒப்பந்தம எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.